226

இந்தி எதிர்ப்பு கீதமும்

ஸ்டாலின் ஜெகதீசன் அவர்களின்

உண்ணவிரத கீதமும் அடங்கியுள்ளது

(முதற்பாகம்)

OFFICE OF THE REGISTRAR OF
11 JUL 1938
MADRAS

இயற்றியவர்

முதுகுளத்தூர் தோழர்

M. S. பாலசுந்தரம் அவர்கள்

திருவாரூர்.

சென்னை சமதர்ம இளைஞர் கழகத்தாரால்
வெளியிடப்பட்டது.

1938.

இந்தி எதிர்ப்பு கீதம்.

வேண்டா.

செந்தமிழ்ச் செல்வியின் தேன்மாரி கண்டிலார்
சந்தக் குறிப்பதைச் சாராமல்—விந்தையாய்
சொந்தநிலை நாட்டிடும் சோம்பேறி இந்தியுள்
சந்தையுற வாடுரூர் சாய்ந்து.

(எல்லோரையும் போலவே—என்ற மெட்டு.)

பல்லவி.

எல்லோர்களும் ஒன்றுசேர்ந்து
எதிர்த்து இந்தியைத் தூள்செய்வோம் (எல்)

அநுபல்லவி.

வல்லமையாய்த் தமிழ்த் தாயின் வீரத்தாலே
வாளைக் கையி லேந்துந் தோளுட ராய்ந்து (எல்)

சரணம்.

ஜாடையாக நம்மைக் கொன்று
சவுக்யம்செய்து கொண்ட நண்டு
மேடையிலே யேறி நின்று
மெய்மறந்து வாட்டு தின்று
மோடியாகச் சேர்ந்த இந்தி
மூடுபடச் செய்வோம் முந்தி
பாடிப் பாலன் பாக்கள் கெந்தி
பாகம் காணுவோமே வுந்தி (எல்)

OFFICE OF ... 17 JUL 1964 MADRAS

(சிவபெருமான் கிருபை வேண்டும்—என்ற மெட்டு)

பல்லவி.

தமிழதின் குணம் தெரியாது—நம்
தலைவர்க ளிங்கிப் பொழுது தளைத்த சூது (தமி)

அநுபல்லவி

உமிழ்ந்தெரியும் இந்தியால் உலகத்திற் கென்ன நன்மை
ஒருபகுதியி லுள்ளோர் ஒதிடத்தானே வண்மை (தமி)

செந்தமிழ்ச் செல்வினத்தைத் தெரிந்துறம் கொள்ளாதோர்கள்
சேர்ந்தார் இந்தி ஒப்பந்தத்தில் சிறுவர்கள்போல் (தமி)

திட்டமா யுபகாரம் சட்டமாய்ச் செய்வோமென்று
கட்டாயமாய் இந்தினை கண்கொள்ளச் செய்தார் (தமி)

காரியம் கொள்ளும்வரை காலைப்பிடித்து நின்றார்
வீரிய வார்த்தைக ளிப்போ வீளப்ப தென்றால. (தமி)

(தேவி நின்மலர் திருவடி சரணம்—என்ற மெட்டு)

தாய்மொழிக்கு பழி சுமற்றிட இந்தி
தமிழ்நிலமே வந்தது காண்
மாயவுறுவுடனே இந்தி வந்திட
மாதலைவர் செய்ததும் வீண் (தாய்)

நாகரீகமுடன் வாழுமின்னுடு
நாளைக்கென் செய்புமோ
யூகமாய் ராம ராஜ்யத்தின் மேடு
உறிமையா. யுறவாடுமே (தாய்)

ஆப்பம் பகிர்ந்திட்ட குரங்குக் கதைபோல்
ஆமோ யின்னுடு
பார்ப்பனீய நிரை பரவிடும்போது
பஞ்சமர் கட்கே கேடு (தாய்)

நாட்டின் நன்மைக்கு நாடுகிறோ மென்ற
நம்மவர்களின் கோடு
மேட்டிமையாய் இந்தி மேவிடச் செய்தது
மிகமிக வெட்கக்கேடு (தாய்)

ஓட்டுறிமை வாங்கக் கேட்டலையும்போது
ஒழிந்திடும் இந்தி தற்போது
நாட்டங் கொள்ளுமென்று நாங்களறிந்திட்டால்
நாடுமோ யிந்த வாது. (தாம்)

(அதிர்ஷ்டம் வந்திட்டவுடன் கண்தெரியாது—என்ற மெட்டு).

தோழர்களே வந்து துணைபுரிவீரே
துரிதமுடனே இந்தி துரை தடுப்பீரே
கோழைக ளென்னும் நம்மின் குறையறுப்பீரே
குழலினிதாய்த் தமிழ் குணம்பொருப்பீரே (தோ)

தமிழனுடையநாடு படையெடுப்பாலே
தானிழக்கப்பட்டது தடுத்திடாதாலே
தமிழனுடைய நூல்கள் கடலின் நீராலே
தகுதியிலேயழிக்கத் தடித்ததுமேலே (தோ)

தமிழனுடைய கல்வி அறிவு மிப்பாலே
தர்ப்பை யேந்தும் பார்ப்பனர் புராணத்தினாலே
உமிழ்ந்தெறிய நேர்ந்ததே ஒற்றுமையாலே
ஓங்கிப் பொருள்பறித்தல் புரோகிதத்தாலே (தோ)

தமிழனுடையவீரம் தந்திரத்தாலே
தகுந்த உபதேசத்தால் தடுத்துமிக்காலே
தமமுடன் இந்திவந்து தாய்மொழிபோலே
தாட்டிகம் பேசுதையா தலைவர்களாலே (தோ)

சத்தியாக்கிரகத்தின் சாகரமீது
சவுக்யம்பெற வுறிமை சாருமிப்போது
இத்தினமே எழுந்து எல்லோரும் வாது
எதிர்த்து முனைந்துவிட்டால் என்வரும் தீது (தோ)

(மாயாப்ரபஞ்சத்தில்—என்ற மெட்டு.)

மாதலைவர் தொழில் யாரிடஞ் சொல்லுவோம்
மந்திபோல் இந்திவந் தெய்ததை வெல்லுவோம்
இந்திய தேசத்தில் எங்கள் தென்தேயம்
இணையற்ற செந்தமிழ்த் தாயினுபாயம்
நிகண்டு நன்னூல் முதல் காரிகை பாரீர்
நேயர்களே இங்கு ஆரியராலே
நெஞ்சாரச் செய்திட்ட வஞ்சமய்யா—இது— (மந்)
செந்தமிழாலே நம் கொஞ்சிடும் மொழிகள்
பஞ்சுபோல் செய்திடப் பார்த்திடும் வழிகள்
நஞ்சிடவே நாம் மிஞ்சிடமாட்டோம்
அஞ்சுகத் தாயின்முன் அணைதடுப்போமே
அஞ்சாமல் இந்திதனைக் கெடுப்போமே. (மந்)

(பாப்பா மிட்டாயி வாங்கித்தாரேனுனக்கே—என்ற மெட்டு).

பல்லவி.

ஜாதித்திமிர் கைகொண்ட சூட்சியைப் பாரீர்—சுய (ஜா)

அநுபல்லவி

ரீதியாய் இந்தி ஓதிய தந்த்ரம் வாதனையைத் தருமே—
கொடும் (ஜா)

தொகையறு

மேதினி தன்னி லின்னுள் நாதனுய் நின்று வோங்க
சாதனை செய்து வாக்கை தூதனைப்போல வாங்கி

பாட்டு

காதகராய் விளங்கும் காட்சியைக் காணீர்

(மகுடம்.)

நீதியதாகச் செல்வது போலே
நினைவுதன்னுள் கையில் நின்றிட மேலே
நாதியான தமிழ்த் தாயைப் பின்னுலே
நடுக்கத்துணிந்திடும் ஆரியராலே (ஜா)

தொகையறு

கெஞ்சியே ஓட்டைக் கேட்டோர்
மிஞ்சியே வந்துவிட்டார்
அஞ்சிடா நம்மை யின்று
பஞ்சைபி ன்றெண்ணி விட்டார்

பாட்டு

ஏமாந்தோ மென்றல்லவோ ஏய்க்கத் துணிந்தார்.

மகுடம்

நாமிந்தக் காலத்தில் நரிகள் யின்னும்
நாடவிட்டிருந்தால் நறுக்கவே பண்ணும்
பாமர மக்களின் பாலன்ன னெண்ணும்
பரதப் புவியிற் கொடும் பார்ப்பன ரென்னும் (ஜா)

நொண்டிச்சிந்து.

ஓடிவந்த இந்திப்பெண்ணே கேள்—நீ
தேடிவந்த கோழையுள்ள நாடிதல்லவே (ஓ)
வீரத்தமிழ் கொஞ்சும் நாட்டிலே—இந்திப்பெண்ணே
காரமில்லாச் சொற்களேற்க மாட்டோம் வீட்டிலே
ஆரியர்களாலுதித்து நீ—நாட்டை விட்டு
அந்தரத்தாண்டவத்தாலே வந்த கோளனி
மணமுடித்த பெண்ணிருக்க—இந்திப்பெண்ணே
மறுமணப்பெண்ணுகநீ வந்ததும் வீணே
சுகதுக்கம் உள்ள கணவன் —தனைவிட்டு
சூட்சியாலே வந்தவிதம் சோரமல்லவா
என்தாய் கொடுசூரி யல்லவா—உன்னை எந்தன்
தந்தையுடன் கண்டாலவள் கோபம்மெள்ளவா
போர்முகமக்கள் கோடியுண்டு—தாயுத்திரவை
நாடி முனைந்திட வுன்னை ஆக்குவோம் துண்டு

மூட்டைகட்டும் பார்பனீயத்தால்—பார்த்தாவை விட்டு
சாட்டை வாங்கும் காலம் வந்ததே—மூடப்பெண்ணே
காமக்கண்களைத்திறந்திங்கு—கணவன்விட்டு
காலாடியாய்வந்த குச்சுக்காரப் பெண்ணே கேள்
எங்கள் தமிழ்த்தாயின் குணத்தை—யறிந்திடாது
ஏண்டி வந்தாய் மூடுமந்த்ர ஓடுடன் பெண்ணே
நூற்றுக்குத் தொண்ணூற்றெழுவரை—பாக்கி மூவர்
தாக்கிதன்னுள் கையில் கோர்க்க நோக்கம்பாரடி
அறிவிலி அண்ணுத்தை பலர்—தாயின்வீரத்தை
ஆராய்ந்து பார்க்காதுன்மேல் காதலித்தாரடி
ஆங்கிலத்தை நீயே தூஷித்தாய்—அன்னியபாஷை
ஆகாதென்றே வேகமுடன் ஆவேஷங் கொண்டாய்
தான் அன்னியபாஷை யாகியும்—தமிழ்நாட்டில்
தட்டுக்கெட்டுவந்த தட்டுவாணி பெண்ணே கேள்
ஓளியத்தெரீயா தொருவன்—தலையாரி வீட்டில்
ஓளியும் கதைப்போல் எங்கள் பங்காளிக்கதை
சுதந்திரம் வருமென்றெண்ணி—உன்னைத்தொட்டு
சொந்தத்தாயைத் தானிழக்கும் சோகம் பாரடி
பார்ப்பார ஜாதிக்குள்ளே நீ—பலப்பேரை
பாகமாக்கிக் கொண்டால் வெளி தெரியாதடி
மாபெருங் கூட்டத்திடையே—வந்தால்
மயிரறுபட்டு மிதிபடுவாயடி
ஜாதிதுவேஷம் பொல்லாதடி—நீ கொண்ட
சாத்திரக் கந்தல்களிங்கு ஏற்காது போடி
வந்தவழிபார்த்துச் செல்லடி—இந்திப்பெண்ணே
வாருகோலால் வாங்குமுன்னே வூரைநோக்கடி
மரியாதையாய் விட்டிருந்தோம்—இன்று முதல்
மானங்கெட்டோரை விலக்கி மங்களங்காண்போம். (ஓ)

(காலக்கோடுமையால்—என்ற மேட்டு)

ஏழைமக்க ளின்னும் ஏமாந் திருந்திட
ஏய்க்கும் வழியுள்ள சூட்சி
பாழாய்ப்போன இந்தியால் வந்து தீருமோ
பார்ப்பனர் கொண்டாடும் ஆட்சி (ஏ)

செந்தமிழ்த் தாயினுள் இன்சொல் லறிந்திடாத்
தேசத் தலைவர்களாலே
சொந்தமொழி யிழந்தேதெரு நின்றிடுஞ்
சோம்பேறி யாகுவோம்மேலே

நாட்டின் நன்மைக் குழைக்கப்பல ஜோலிகள்
நாலுபுறங் கிடந்தேதங்க
கோட்டியாய் இந்தி புகுந்திட்டதாலே நாம்
கோறும்பல னென்னவோங்க

நாம்வளர்த்தகடாய்மாரிற் பாய்ந்தாற்போல
நம்தேசத்தின் தலைவர்கள்
தம்மிஷ்டம்போலவே தானடப்போ மென்று
தாங்காமொழிக்குள் ளூற்றூர்கள்

கட்டாயமாய் இந்தி திட்டமாய் வந்துமே
முட்டாளாய் ஆக்குவதாலே
கொட்டாரம்போட்டும் பார்ப்பனீய மோங்கியே
சட்டம்பறக்குமே மேலே.

(ராஜா வருவாரென்று—என்ற மேட்டு)

பூமிபிறந்தமுதல் பூமான்கள் கற்றமுதல்
நேமிதமிழ்த் தாய்மொழி—எந்தன் தோழரே
நேர்த்தியாம் அந்தவழி

மூவேந்தர் ஆண்டுவந்த முன்னுள்தொட் டின்னளாய்
பாவேந்தர் வாழ்ந்ததெல்லாம்—எந்தன் தோழரே
பாங்காய்த் தமிழாலன்றே

கம்பன் ஓட்டக்கூத்தன் காளமேகம் புகழேந்தி
தெம்பாகச் செய்தகவி—எந்தன் தோழரே
செந்தமிழ்ச் செயலாலன்றே

பஞ்சாங்கம் பார்க்கவந்தோர் பாரில் பிழைக்கவந்தோர்
அஞ்சாமல் இன்றேநின்று—எந்தன் தோழரே
ஆகாத இந்தி தந்தார்

ஆங்கிலர் ஆளுகையை அன்னியர் சூட்சியென்றார்
எங்கிநாம் வீழ்ந்திடவே—எந்தன் தோழரே
இந்திதனைக் கொடுத்தார்

கட்டாயக் கல்வியென்று காதலாய் கொண்டுவந்து
முட்டாளா யாக்கவல்லோ—எந்தன் தோழரே
மூடுமந்த்ரம் போட்டுநின்றார்

ஏழாம் வகுப்புக்குமேல் என்தோழர் ஆகாதென்று
பாழாய்ச் செலக்ஷன்ஒன்று—எந்தன் தோழரே
பாரில்வந் தாட்டுதையா

தொண்ணூற்று ஏழுபேரை தூரத்தில் நிற்கவைத்து
மண்ணுளப் பார்க்கின்றீரே—எந்தன் தோழரே
மானிலத்தில் மூன்றுபேர்கள்

ஐயாயிரவருஷ ஆணியாம் செந்தமிழ்
பொய்யான இந்திவந்து—எந்தன் தோழரே
புன்னகை காட்டுதையா

நானூறு ஆண்டின்பின்னே நம்பர் விளங்கிவந்த
நாங்கள் அறியா இந்தி—எந்தன் தோழரே
நாடிடுதல் விந்தையே.

ஸ்டாலின் ஜெகதீசன் அவர்களின் உண்ணாவிரதம்

(சிறைவாய் தன்னில் அழுதார்—என்ற மெட்டு)

பல்லவி

கருணையின்னுமில்லையா காங்கிரசாரே
கதறும் பலன் தொல்லையா (கரு)

(அநுபல்லவி)

சீரும் சிறப்புட்னே செந்தமிழ்த்தாயிருக்க
சீரழிந்த இந்திவரச்செய்ததை நீக்க (கரு)

(தொகையறு)

செந்தமிழ்த்தாயவள் சிந்திடுங்கண்ணீரால்
தேசமே பாழாகுமன்றே
நிந்தனைக்காளாக நீங்கள் பழியேற்றிட
நின்றிடுதல் நாட்டிற்கு நன்றே

(பாட்டு)

பட்டினித்தவமிருக்கும் பாலன் ஜெகதீசனின்
பலம் குறைந்ததைக்காணீரோ பாவிபுங்கட்கு (கரு)

தொகையறு

தீரனும் ஸ்டாலின் ஜெகதீசன் திருவாரூர்
ஜெனித்திட்ட வீர சிங்கமய்யா
சென்னை மாநகரத்தில் உண்ணுத நோன்பதாய்
செய்திடும் தியாகமும் பொய்யா

(பாட்டு)

ஆர்வமுள்ளகாளைகோடி ஆத்திரங் கொள்ளுதய்யா
அன்புள்ள சொற்கேளுமய்யா—ஆச்சாரி அய்யா (கரு)

(தொகையறு)

கட்டாய இந்தியின் திட்டத்தை நீக்கிடக்
கதறியே கண்ணீரை யுதிர்த்தோம்